அரசாங்க நிர்வாகச் சுற்றிக்கை : 18/2015(V)

எனது இலக்கம் : EST-7/03/ALW/2012

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண

சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

சுதந்திர சதுக்கம்

கொழும்பு – 07

2024.06.27

அமைச்சின் செயலாளர்கள்
மாகாணத் தலைமைச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**பொதுச்சேவையின் நிறைவேற்றுச்சேவை வகுதி உத்தியோகத்தர்களுக்கு விஷேட கொடுப்பனவொன்றினை வழங்குதல்**

மேற்படி விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட 2015.06.26 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2015, 2015.07.13 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2015(I), 2018.02.20 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2015(II), 2019.12.07 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2015(III) மற்றும் 2020.01.07 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2015(IV) என்பவற்றின் மீது உங்கள் கவனத்தை ஈர்க்கிறேன்.

2. 2015.07.13 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2015(I) இன் பந்தி ஒன்றின்படி தகைமை பெறும் பொதுச் சேவையின் நிறைவேற்றுச்சேவை வகுதி உத்தியோகத்தர்களுக்கு இதுவரை சேவைக் காலத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட விசேட கொடுப்பனவுக்குப் பதிலாக சேவைக் காலத்தைப் பொருட்படுத்தாமல் ரூ.25,000/- இன் விசேட கொடுப்பனவொன்றினைச் செலுத்துவதற்கு 2024.06.24 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கொடுப்பனவு இலங்கை பொறியியல் சேவை, இலங்கை கட்டிட நிர்மாண சேவை, மற்றும் அளவையாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கு உரித்தாகின்றது.

3. மேலும், 2015.06.26 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2015 வெளியிடப்பட்ட பின்னர் அச்சுற்றறிக்கை மற்றும் அதற்கு விளைவாந்தன்மையாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் உரித்துடன் அதற்கு மேலதிகமாக சேவை/பதவியின் தனித்துவத்தை கருத்திற்கொண்டு, விஷேட கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்/சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு இச்சுற்றறிக்கை நடைமுறைப்படுத்தப்படும் திகதிக்குரிய ஏற்பாடுகளின்படி உரித்தாகும் கொடுப்பனவு/கொடுப்பனவுகள் ரூ.25,000/-க்கு குறைவாக இருந்தால் அவர்களுக்கு அக்கொடுப்பனவு/கொடுப்பனவுகள் மற்றும் இச்சுற்றறிக்கை மூலம் உரித்தாகும் ரூ.25,000/-க்கு இடைப்பட்ட வித்தியாசம் மாத்திரம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு அக்கொடுப்பனவு/கொடுப்பனவுகள் ரூ.25,000/- இற்குச் சமமாகவோ அல்லது

அதனிலும் அதிகமாகவோ இருந்தால் அக்கொடுப்பனவு/கொடுப்பனவுகள் இந்தச் சுற்றறிக்கையின்படி திருத்தப்படக்கூடாது.

4. அதன்படி, 2020.01.07 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2015(IV) மூலம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட இலக்கம் 18/2015(III) ஐக்கொண்ட 2019.12.07 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 2024.06.30 ஆம் திகதி முதல் ரத்து செய்யப்படுவதோடு, 2011.12.12 ஆம் திகதிய இலக்கம் 28/2011 ஐக்கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் படி இலங்கை பொறியியல் சேவை உத்தியோகத்தர்களுக்கு, 2013.11.12 ஆம் திகதிய இலக்கம் 23/2013 ஐக்கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் படி இலங்கை கட்டிட நிர்மாண சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அமப/13/1466/533/016 மற்றும் 2013.10.31 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட இலக்கம் 41.07 தீர்மானத்தின்படி இலங்கை அளவையாளர் சேவையின் உத்தியோகத்தர்களுக்கு மேற்படி ஏற்பாடுகளின்படி செலுத்தப்படும் கொடுப்பனவுகள் 2024.07.01 ஆம் திகதி முதல் செலுத்தப்பட மாட்டாது.

5. இந்த சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் ஒப்புதலுடன் வெளியிடப்படுவதோடு. இந்த சுற்றறிக்கை ஏற்பாடுகள் 2024.07.01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.


பிரதீப் யசரத்ன
ஒப்பம்/செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி - 011-2697233
தொலைநகல் - 011-2692158
மின்னஞ்சல் - ade-vii@pubad.gov.lk